## சுருக்கம்

பள்ளிக் கல்வி – அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2009–2010 மற்றும் 2010–2011ஆம் கல்வியாண்டில் நிலையுயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகளுக்கு 1267 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது – பதவி உயர்வு மூலம் மற்றும் தற்போதுள்ள நடைமுறைகளின்படி நிரப்ப அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (சி2) துறை

ஆரசாணை (நிலை) எண்.172

நாள்–11.07.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
ஆனி 27

படிக்க

1. அரசாணை நிலை எண்.15, பள்ளிக் கல்வி, நாள் 23.01.2012
2. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6 அவர்கள் கடித ந.க.எண்.14785/ கே4/2012, நாள்–06.06.2012 மற்றும் 26.06.2012.

***

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட் அரசாணையில் 2009–2010ம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட 831 நடுநிலைப் பள்ளிகளுக்கு 8ம் வகுப்புக்கான ஆசிரியர் பணியிடங்களாக 831 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் 2010–2011ம் கல்வியாண்டில் நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட 218 நடுநிலைப் பள்ளிகளுக்கு 7மற்றும் 8ம் வகுப்புக்கு ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் வீதம் 436 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஆக மொத்தம் 1267 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை 2011–2012ஆம் ஆண்டிலேயே தோற்றுவித்தும், தோற்றுவிக்கப்படும் 1267 ஆசிரியர் பணியிடங்களை நடைமுறையிலுள்ள விதிகளை பின்பற்றி, ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக பணி நாடுநர்களை தேர்வு செய்து நிரப்பிக்கொள்ள தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 325 ஆசிரியர் பணியிடங்கள் ஜனவரி 2012ல் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டது என்றும் எஞ்சியுள்ள 942 பணியிடங்களை தகுதியுள்ள இடைநிலை ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு மூலம் நிரப்பக்கோரி ஆசிரியர் சங்கங்களால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்காண் அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்பக்கோரி வழக்குகள் தொடர்ந்த வண்ணம் உள்ளனர் எனவும், எனவே, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் எஞ்சியுள்ள 942 பணியிடங்களை அரசாணை (நிலை)எண்.239, பள்ளிக் கல்வி, நாள் 22.9.2007ன்படி ஊராட்சி, நகராட்சி மற்றும் அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் உரிய தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு மூலம் நிரப்பிக் கொள்ளவும், மீதமுள்ள பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பிக் கொள்ளவும் அரசின் அனுமதியினை தொடக்கக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

www.TeacherTN.com

3. அரசாணை (நிலை) எண்.239, பள்ளிக் கல்வி, நாள் 22.09.2007ல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு இடைநிலை ஆசிரியர்களில் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு தகுதி பெற்றவர்களிலிருந்து பாடவாரியாக ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு ஏற்ப பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்வு வழங்கவும், தகுதியுள்ளவர்கள் இல்லாத நிலையில், அந்தப் பணியிடங்களை அரசின் அனுமதி பெற்று வேலை வாய்ப்பக மூலம் நேரடியாக நியமனம் செய்து கொள்ளவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை)எண்.145, பள்ளிக் கல்வி, நாள் 29.06.2009ல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தகுதியுள்ள இடைநிலை ஆசிரியர்களுக்கு முன்னுரிமைப்படி பதவி உயர்வு மூலம் நிரப்பிடவும், மீதமுள்ள பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனம் வாயிலாக நிரப்பிக் கொள்ளவும் தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 2007–2008 முதல் 2010–2011 வரை பட்டதாரி ஆசிரியர் பணி நியமனமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 325 ஆசிரியர் பணியிடங்கள் போக மீதமுள்ள 942 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை அரசாணை (நிலை) எண்.239, பள்ளிக் கல்வி, நாள் 22.9.2007ன்படி தகுதியுள்ள இடைநிலை ஆசிரியர்களை கொண்டு பதவி உயர்வு மூலம் நிரப்பிடவும், தகுதியுள்ள இடைநிலை ஆசிரியர்கள் இல்லாத நிலையில், தற்போது நடைமுறையிலுள்ள ஆசிரியர் பணி நியமன முறைப்படி நிரப்பிக் கொள்ளவும் தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.

நகல்:–

நிதித் (வரவு செலவு(பொது–I/II/கல்வி.II/சி.எம்.பி.சி) துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் (ம) இளைஞர் நலத் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வி(வரவு செலவு)துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

www.TeacherTN.com